சிறந்த முறையில், விரும்பிய வகையில் தரமாகவும் உரிய நேரத்திலும் தையல் வேலைகளைச் செய்து கொடுப்பவர்கள்
குமார் தையலகம்
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சூட்டிங் வகைகளை ஒரே இடத்தில் பெற்று உங்கள் விருப்பத்திற்கேற்றவாறு தைத்துக் கொள்ள நாடுங்கள்
குமார் தையலகம்
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 16 சனிக்கிழமை (31 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 35

சமஷ்டி முறையை அரசு ஆதரிக்காது

பௌத்த மத பீடாதிபதிகளுக்கு அமைச்சர் பீரிஸ் உறுதிமொழி

கொழும்பு, டிசம்பர் 31

"இனப்பிரச்சினை தீர்வுக்கு சமஷ்டி முறையை அரசு ஆதரிக்கவில்லை. பெரும்பான்மை சமூகத்தின் உரிமைகளை தியாகம் செய்யாமல் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்."

நீதி, அரசியல் விவகாரங்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு கூறியுள்ளார். தலதா மாளிகையில் மல்வத்த பீடாதிபதி விபலக்தி தேரர், அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பானே சந்திரானந்த தேரர் ஆகியோரை நேற்று சந்தித்தபோது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வுகாண சகல அரசியல் கட்சிகளும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மக்கள் நன்மை கருதி அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஒருவரின் சுயநலத்துக்காக அரசமைப்பை உருவாக்கக் கூடாது என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார். (இ-3)

பாப்பரசரை தரிசிக்கச் செல்வதற்கு 1,500 பேர் மட்டுமே இதுவரை பதிவு

யாழ்ப்பாணம், டிச. 31

வரும் 20 ஆம் திகதி இலங்கை வரும் பரிசுத்த பாப்பரசரைத் தரிசிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து செல்ல ஆயிரத்து 500 கத்தோலிக்க மக்களே இதுவரை தமது பெயர்களை பதிவு செய்துள்ளனர் என்று யாழ். ஆயர் வட்டாரங்கள் தெரிவித்த

[6ஆம் பக்கம் பார்க்க]

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அரச நிதி துஷ்பிரயோகம்

காங்கிரஸ் குற்றச்சாட்டு

சென்னை, டிச. 31

தமிழக அரசு எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்காக அரசாங்க நிதியை முறைகேடான முறையில் பயன்படுத்தியிருப்பதாக தமிழககாங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அது மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

நேற்று சென்னையில் காங்கிரஸ் கட்சியின் எம். பிக்கள் எம். எல். ஏக்கள் மற்றும் மாவட்ட கமிட்டி தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் இது தொடர்பான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

தமிழாராய்ச்சி மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூரில் நடைபெற இருப்பது தெரிந்ததே. (இ-ஐ)

மாநாட்டு அழைப்பிதழில் ஆளுநரின் பெயர் இல்லை

சென்னை, டிச. 31

தஞ்சையில் நாளை ஆரம்பமாகும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கான அழைப்பிதழ்கள் எதிலும் தமிழக ஆளுநர் திரு. சென்னா ரெட்டியின் பெயர் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டுக்கான அழைப்பிதழ்கள் தமிழ் நாட்டில் கடந்த திங்களன்று முக்கிய பிரமுகர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

தொடக்கவிழா, நிறைவுவிழா எனத் தனித்தனியே இரு அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டுள்ளன.

தொடக்கவிழா அழைப்பிதழில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தயாள் சர்மாவின் பெயரும், நிறைவுவிழா அழைப்பிதழில் பிரதமர் நரசிம்மராவின் பெயரும் இடம்பெற்றுள்ளன.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் பெயர் இடம்பெற்றுள்ள இவ்விரு அழைப்பிதழ்களிலும் ஆளுநர் சென்னா ரெட்டியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. (ஐ)

பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

சென்னை, டிச. 31

தஞ்சையில் நாளை முதல் ஆரம்பமாகும் உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் ஐந்து நாட்களும் முக்கிய இடங்களில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எஸ். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் ஆர். நல்லசிவன் அறிவித்துள்ளார்.

இதேவேளை —

தமிழ் மாநாட்டைஒட்டி தமிழகத்தில் பாடசாலைகளுக்கு தமிழக அரசு விடுமுறை அறிவித்துள்ளது. (இ-ஐ)

சி. டபிள்யூ. ஈ முகவராக ப.நோ. கூ. சங்க கிளைகள்!

கொழும்பு, டிச. 31

நாடுமுழுவதிலும் இயங்கும் ப. நோ. கூ. சங்கங்களையும் தமது முகவர்களாக நியமிக்க கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சி. டபிள்யூ. ஈ) முடிவுசெய்துள்ளது.

அத்துடன் 5 ஆயிரம் தனியார் வியாபாரிகளையும் தமது முகவர்களாக நியமிக்க அந்த நிறுவனம் முடிவுசெய்

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரசு

எல்லாம் ஒரு குட்டையில் ஊறின மட்டைகள் தான் பாருங்கோ.... !

தனியார் பரீட்சார்த்திகள் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிச.31

ஆகஸ்டில் நடந்த ஜி.சி.ஈ (உயர்தர) பரீட்சையில் தோற்றிய தனியார் பரீட்சார்த்திகளின் முடிவுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்பட்ட பரீட்சை முடிவுகள் நேற்று உரியவர்களுக்கு தபால் அலுவலகங்கள்ஊடாக விநியோகிக்கப்பட்டன. (இ—3-17)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 31

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். (இ)

புத்தாண்டு பிறந்த கையோடு பேச்சு

இன்னும் இரண்டொரு நாட்களில்

கொழும்பு, டிசம்பர் 31

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள் புத்தாண்டு பிறந்த கையோடு, இரண்டொரு தினங்களில் நடைபெறலாம் என்று கொழும்புத் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வலியுறுத்தியதற்கு இணங்க, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளதாகவும் அறியவந்தது.

அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இன்று நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உயர் மட்ட மாநாட்டில் இரண்டாம் கட்டப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக முடிவு செய்யப்பட்டு, திகதி ஊர்ஜிதம் செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

இன்றைய மாநாட்டில் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட வேண்டிய விடயங்கள் குறித்து அரச பிரதிநிதிகள் குழுவுக்கு விளக்கப்படும் என்றும் அறிய வருகிறது.

போர் இடை நிறுத்தம், புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் இடம் பெறும் என்று தெரியவருகிறது.

முதற்கட்டப் பேச்சுக்களில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுடன் படை உயரதிகாரிகள் சிலரும் கலந்து கொள்வர் என அரச தரப்பில் இருந்து கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசியத் தலைவர் பிரபாகரன் இம்மாதம் 22 ஆம் திகதி எழுதிய கடிதத்தை அரசாங்கம் சாதகமாகப் பரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடும் துப்பாக்கிச் சண்டையின் பின்

வீரப்பனிடம் பிடிபட்ட பொலீஸ் அதிகாரி மீட்பு!

சென்னை, டிச. 31

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் பிணை ஆட்களாக பிடித்து வைத்திருந்த பொலீஸ் அத்தியட்சகர் உட்பட3 பேரையும் சிறப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

திருமுனைக்கு அருகே காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீரப்பன் கும்பலுடன் நடந்த நீவிர துப்பாக்கிச் சண்டையின் பின்னர் இந்த மூவரும் மீட்கப்பட்டனர்.

இந்த கும்பலைச் சேர்ந்த மூன்று பேரையும் சிறப்புப் படையினர் கைது செய்தனர். ஆனால் வீரப்பன் தப்பிவிட்டான் என்று தெரிவிக்கப்பட்டது

கடந்த 3ஆம் திகதி பொலீஸ் அத்தியட்சகரையும் மற்றைய இருவரையும் வீரப்பனின் சகாக்கள் கடத்தியிருந்தனர்.

இவர்களைப் பிடித்து வைத்திருந்த வீரப்பன் தமிழக அரசுடனும், மத்திய அரசுடனும் பேரம்பேசி வந்ததும்—

நூறு கோடி ரூபாவை அந்தால், அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று அரசுக்கு வீரப்பன் சவால் விட்டிருந்ததும் தெரிந்தவையே. [ஒ]

மட்டக்களப்பு தாக்குதல்

20 நிமிடங்களில் முகாம் புலிகள் வசம் வீழ்ந்தது!

படையினர் அனைவரும் தப்பி ஓட்டம்

யாழ்ப்பாணம், டிச. 31

மட்டக்களப்பு மாவட்டம் தாம்பரவெளி பூமாஞ்சோலை இராணுவ முகாம் மீது புதன் கிழமை இரவு தாக்குதல் நடத்திய புலிகள் 20 நிமிட நேரத்துக்குள் அந்த முகாமை கைப்பற்றி முற்றாக அழித்தனர்.

கரடியனாறு — செங்கலடி ஆகிய இருபிரதேசங்களுக்கும் இடையே அமைந்துள்ள படை முகாமே கைப்பற்றி அழிக்கப்பட்டது.

முகாமைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த காவலரண்கள், விடுதிகள் அனைத்தையும் தீயிட்டு முற்றாக எரித்தனர்.

முகாம் கைப்பற்றப்பட்ட ஒன்றரை மணி நேரத்தின் பின் விடுதலைப் புலிகள் அந்தப் பகுதியிலிருந்து பின்வாங்கினர்.

அவ்வேளை —

செங்கலடி, கரடியனாறு ஆகிய இரு படை முகாம்களுக்கு இடையே காவலில் நின்ற விடுதலைப் புலிகளின் இரு அணிகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக படை அணிகள் முன்னேறி வந்தன.

முன்னேறி வந்த படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்தனர். இதனால் இராணுவத் தரப்பில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் சேத விவரங்கள் தெரியவரவில்லை.

பூமாஞ்சோலை முகாமில் இருந்த படையினர் அனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

18 போராளிகள் வீரச்சாவடைந்தனர்

யாழ்ப்பாணம், டிச. 31

மட்டக்களப்பு மாவட்டம் தாம்பரவெளி (பூமாஞ்சோலை) இராணுவ மினி முகாம் மீதான தாக்குதலில் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட துணைத் தளபதி லெப்டினன்ட் கேணல் லக்ஷ்மன் (பொம்பர்) உட்பட 18 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த போராளிகளின் விவரம் வருமாறு:-

★ லெப். கேணல் லக்ஷ்மன் அல்லது பொம்பர் (வேலுப்பிள்ளை ஜெயக்குமார் — மட்டக்களப்பு).
★ மேஜர் சத்தியா (அர்ச்சுனப்பிள்ளை மோகன் பிள்ளை — பதுளை).
★ மேஜர் துவாரங்கன் (சிவநாதன் முத்துலிங்கம்).
★ மேஜர் நிதர்சராஜா (மயில்வாகனம் ஏகம்பமூர்த்தி

[6 ஆம் பக்கம் பார்க்க]

9 பேரின் புகழுடல்கள் யாழ். வந்து சேரும்

யாழ்ப்பாணம், டிச. 31

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் முகாம் மீது நடத்திய தாக்குதலில் வீரமரணமடைந்த போராளிகளில் 9 பேரின் புகழுடல்கள் யாழ்ப்பாணத்துக்கு நேற்றிரவு வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து விமான மூலம் வவுனியாவுக்கு படையினரால் எடுத்து வரப்பட்ட புகழுடல்கள் நேற்று காலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும்—

இப்புகழுடல்கள் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், டிச. 31

மட்டக்களப்பு மாவட்டம் தாம்பரவெளி பூமாஞ்சோலை இராணுவ முகாமில் இருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்:—

★ ஏ. கே. எல். எம். ஜி. — 01
★ 2 அங்குல மோட்டர் — 01
★ ரி 56 பட் துப்பாக்கி — 07
★ நடுத்தர ரவை — ஆயிரம்
★ ஜே. ஆர். ரவை — 405

[ஐ]

கல்விப் பணிப்பாளராக துரை தியாகராஜா

வவுனியாவுக்கு இடமாற்றம்

யாழ். மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராக (ஆங்கிலம்) பணியாற்றிய திரு. துரை தியாகராஜா வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதிமுதல் இடமாற்றம்பெற்ற இவருக்கு இடமாற்றக் கடிதம் நேற்றுத் தான் கிடைத்தது

கல்வி சேவைகள் ஆணைக்குழு செயலாளர் வீரரத்தினாவால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திரு. நவரத்தினராஜா வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (இ-3)

பேரரசி வண்ணச் சோலை
ஸ்தாபனத்தாரின்
மாபெரும்
மலிவு விற்பனை
இன்று இறுதி நாள்
புதுரக புடைவை தீனுகள்! உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்
அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்
பேரரசி வண்ணச் சோலை
(மகாராணி)
யாழ்ப்பாணம். (பி-10128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுச் சொத்தாய் வாழ்ந்த

அமரர் சடாட்சர சண்முகதாஸ்

தம்பி, எம் உத்தமப் பெருமகனே, உனக்காக நான் எழுத வேண்டிவரும் என எண்ணியே இருக்கவில்லை.

பல பெரியோர்கள் உனக்காக எழுதிய அஞ்சலி மலரைக் காண்கிறேன். எண்ணாதவை எல்லாம் நிகழும் இயல்பின் நடுவேதானே நாம் வாழ்கிறோம்? எனினும் நெஞ்சம் தவிக்கிறது.

ஒரு நல்ல குணத்தை ஒருவரிடம் தேடி ஆய்ந்திடும் நிலை சில வேளைகளில் எழுவதுண்டு, ஆனால் உன்னிடம் எல்லா நலன்களும் நிறைந்திருந்தன. பெரும் பதவிகளின் நடுவில் மட்டுமல்லாது, மக்களின் வாழ்த்தொலியின் நடுவேயும் நீ வாழ்ந்தாய்.

'புங்குடுதீவுக் குரல்' எனும் தட்டச்சுப் பிரதியை நடத்திய போது அன்று மாணாக்கப் பருவத்தில் இருந்த நீ காட்டிய ஆர்வம்-அளித்த ஒத்துழைப்பு-என்னால் மறக்க முடியாதவை. அதே நெறியில் கல்வியால், பதவி உயர்வால், பண்பால், பொதுப் பணியால் நீ பெரியவன் ஆனாய்.

தம்பி, அதற்குள் 30-11-94 அன்றே நீ அமரராய் விட வேண்டுமா? நீ மக்களின் சொத்தாக இருந்தாய். அதற்குள் இறைவனின் பொருளாகி விட்டாய். எழுத முடியவில்லை. கைகூப்பி வணங்கவே முடிகிறது. நின் ஆன்மா சாந்தி பெறுக.

உன் உடன் பிறவா அண்ணன்
நாக - பத்மநாதன்

சித்தன்கேணி. (34411)

NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA

95/AL DAY CLASS
(பகல் நேரவகுப்புக்கள்)
(94ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு மட்டும்)

ஆரம்பம்: 02 - 01 - 1995
திங்கள் 8மணி

திங்கள், செவ்வாய், வியாழன் வெள்ளி (8—12)

பௌதிகவியல்
இரசாயனவியல்
விலங்கியல்
தாவரவியல்
தூய கணிதம்
பிரயோக கணிதம்

★ நேர விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(பி-93)

YARL HALL
கல்வி நிலையம்
[திருமறைக் கலா மன்றம் முன்பாக]
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கிளை
பிரத்தியேக கல்வி நிலையம்
2, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

ஆண்டு 4 முதல் O/L
வரை புதிய பிரிவு வகுப்புகள்
ஆரம்பம்: 03 - 01 - 1995
செவ்வாய் மாலை 4-00 மணி

★ விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்

மற்றும்
எமது வழமையான ஆசிரியர் குழு

[34446]

31-ம்நாள் நினைவஞ்சலி

பிறப்பு: 23 — 02 — 1928

இறப்பு: 01 — 12 — 1994

அமரர் நல்லையா அரியரத்தினம்

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

— மனைவி.

உரும்பராய் தெற்கு,
உரும்பராய். (பி-95)

சேவைக் கால பயிற்சி கொடுப்பனவு

யாழ்ப்பாணம் டிச.31 1994 இல் நடைபெற்ற சேவைக்காலப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக் கான கொடுப்பனவுகள். எதிர்வரும் 3ஆம் 4ஆம் 5ஆம் திகதிகளில் பிற்பகல் 2.00 மணியில் இருந்து 4 00 மணிவரை சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். (இ)

வெளிநாட்டு தபால்களே இம்முறை அதிகம்

யாழ்ப்பாணம், டிச. 31 மாதோ கப்பலில் எடுத்து வரப்பட்ட 397 தபால் பொதிகளில் வெளிநாட்டுக் கடிதங்களே அதிகமாக இருந்தன என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன் தினம் இரவு பிரதம தபாலகத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு நேற்றே விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

"உடனேயே மீட்டுவிட்டோம்"

யாழ்ப்பாணம், டிச. 31 மீசாலையைச் சேர்ந்த நாகலிங்கம் அன்னப்பிள்ளை என்ற பெண்மணி தீக்காயங்களுக்கு ஆளாகி இறந்த சம்பவம் குறித்து அவரது புதல்வர் திரு. நா. பரமசிவம்—

ஹரிக்கேன் விளக்குடன் கிடங்கில் விழுந்தவரை நாங்கள் உடனேயே மீட்டு 26-12-94 இரவு 11.10 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம்— என்று அறிவிக்கிறார்.

கிடங்கில் விழுந்தவரை உறவினர்கள் மறுநாள் காலையே மீட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாக 27-12-94 உதயனில் வெளியான தகவல் தவறானது என்பதனைச் சுட்டிக் காட்டு முகமாகவே அவர் இதனை எழுதியுள்ளார். (அ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பல்கலைக்கழக அனுமதி-1993/94

மேலதிக அனுமதியும், வெற்றிடங்களை நிரப்புதலும்

முன்னைய பத்திரிகை விளம்பரம் தொடர்பாக 1993/94 கல்வியாண்டிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்காக (1992 A/L ஓகஸ்ட் பரீட்சை) ஆரம்பத்தில் கிடைத்த பெயர்ப் பட்டியலைவிட மேலதிக பெயர்ப் பட்டியல் ஒன்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

மேற்படி கற்கை நெறிகளுக்கான அனுமதிக் கடிதம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து கிடைக்கப் பெற்ற மருத்துவ மாணவர்கள் உடனடியாகப் பதிவு செய்யும்படி கேட்டு கொள்ளப் படுகிறார்கள்.

கலை, வர்த்தக, முகாமைத்துவ, விஞ்ஞான, விவசாய கற்கை நெறி மாணவர்கள் தமது பதிவை மேற்கொள்வதற்கு வசதியாக, பதிவு செய்வதற்கான இறுதித் திகதி 31-12-94 இலிருந்து 31-01-95வரைக்கும் நீடிக்கப்பட்டு உள்ளது. இத் திகதிக்குப் பின்னர் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. பதிவு செய்யாதமாணவர்களின் இடங்கள் வெற்றிடங்களாகக் கருதப்பட்டு, பல்கலைக் கழகமானியங்கள் ஆணைக் குழுவுக்குப் பெயர்ப் பட்டியல் அனுப்பப்படும்.

— பதிவாளர்.

1994-12-29. (பி-10124)

திருவாசகப் பெருவிழா சங்கானையில் நாளை

யாழ்ப்பாணம், டிச. 31 சங்கானை — வெல்வில் ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானத்தில் வருடா வருடம் நடைபெறும்திருவாசகப் பெருவிழாவின் நான்காவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நடைபெறவிருக்கிறது.

காலை 7மணிக்கு சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இருந்து மணிவாசகப் பெருமானின் உருவப்படம் சிவநாம பஜனையுடன் ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

அதனைத் தொடர்ந்து ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தன் தலைமையில் விழா ஆரம்பமாகும்.

இந்து மத குருபீடாதிபதி சிவ ஸ்ரீஸ்கந்தசாம்பசிவாச்சாரியாரின்அருளாசியுரையும், இந்துமத குருமார் ஒன்றியச் செயலாளர் சாம். சோமாஸ்கந்தசர்மா, போதனாசிரியர் ம. ஜெயராமசர்மா, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், கம்பன் கழகத்தைச் சேர்ந்த த. சிவகுமாரன், திருவாளர்கள் அ. கமலானந்தன், எஸ். கணேசசுந்தரம் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெறும்.

சங்கீத பூஷணம் எஸ். கணபதிப்பிள்ளையின் திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

தமிழீழ இளநிலை தேர்வில் அதிகூடிய புள்ளிபெற்றோர்

யாழ்ப்பாணம், டிச. 31 யாழ். மாவட்டத்தில் ஆண்டு 8 மாணவர்களுக்கென நடத்தப்பட்ட தமிழீழ இளநிலைத் தேர்வில் தமிழ், கணிதம், ஆங்கிலம், வரலாறும், சமூகக் கல்வியும், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர், பாடசாலைகள், அவர்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு:

தமிழ்மொழி

புவனேந்திரன் ஈழநாதன் (98) உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, ஜனனி தில்லைநாதன் (97) வேம்படி மகளிர், சயந்தி குகதாசன் (97) வேம்படி மகளிர், தில்லையம்பலம் நிசாந்தன் (96) ஹாட்லி, கிரிஜா மகேந்திரன் (96) யாழ்ப்பாணக் கல்லூரி, ரங்கநாதன் ஜெயப்பிரசன்னா (95) ஹாட்லி.

கணிதம்

அரியநாயகம் துஷ்யந்தன் (100) உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, சிவகுமாரன் கிருஷ்ணகுமார் (99) யாழ். இந்து, சிவகலா சிவசுப்பிரமணியம் (99) மெதடிஸ்த மி.பெ.உ.பா., சிவதி சிவலிங்கராசா (98) சுண்டிக்குளி மகளிர், பிறேமளா செல்வராசா (98) சுண்டிக்குளி மகளிர்.

ஆங்கிலம்

விநாயகமூர்த்தி துஷ்யந்தன் (100) யாழ். இந்துக் கல்லூரி, அருமைநாயகம் டினேஸ் பெனேசார் (99), மகேஸ்வரன் நிற்றகுலன் (99), ரத்தினம் ரஜீவன் (99), மகேந்திரநாதன் சுபேந்திரன் (99), கைலைநாதன் வாகீசன் (99) அனைவரும் பரியோவான் கல்லூரி, வைதேகி வேலாயுதம் (98) மெதடிஸ்த மி.பெ.உ.பா., இராஜசிங்கம் பிரசாந்தன் (98) யா/யாழ்ப்பாணக் கல்லூரி.

வரலாறும் சமூகக்கல்வியும்

ஜெயரூபன் தனபாலசிங்கம் (100) வேம்படி மகளிர், சிவகுமாரன் கிருஷ்ணகுமார் (96) யாழ். இந்து, கணபதிப்பிள்ளை குமணன் (96) ஹாட்லி, தர்மராசா சிறீநிவாசன் (96) ஹாட்லி, சிவபாதசுந்தரம் ஜெயராகன் [96) உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, ஜேசுதாசன் ஜான்சன் (97) புனித பத்திரிசியார் கல்லூரி, குமாரி புஸ்பா இலங்கைநாதன் (96) வேம்படி மகளிர், சிவதி சிவலிங்கராசா (96) சுண்டிக்குளி மகளிர்.

விஞ்ஞானம்

விநாயகமூர்த்தி துஷ்யந்தன் (97) யாழ். இந்து (ஒ)

பாலர் கல்விக்கு
பாரதி பாலர் கழகம்
சாவகச்சேரி
இலங்கை வங்கி அருகில்

கற்கை நெறி
ஆரம்பம்: 04—01—95 புதன்கிழமை

பாலர் கல்வித்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் மிக்க இயக்குநர்களின் நேரடி நெறியாள்கையில் நவீன அடிப்படைக் கல்வித்துறையில் சிறந்து விளங்கும் முன்னணி ஆசிரியர்களின் உதவியுடன் எதிர்வரும் 04-01-95 புதன்கிழமை அன்று ஆரம்பமாகவுள்ளது.

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தால் முன் எடுத்துச் செல்லும் இக்கல்வி நிலையம் உங்கள் மழலைச் செல்வங்களின் உறுதியான எதிர்கால நவீன அடிப்படைக் கல்வியை முன் எடுத்துச் செல்ல இருக்கிறது.

எனவே இதற்கான அனுமதியைப் பெற விரும்புவோர், எதிர்வரும் 03-01-95ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் பிள்ளைகளின் சுய விவரங்களை பதிவு செய்து கொள்ளவும்.

நன்றி.

பாரதி பாலர் கழக இயக்குநர் சபை,
தெ. இ. இ. ஒன்றியம்,
இலங்கை வங்கி வீடு,
சாவகச்சேரி.

30-12-94 (பி-10125)

ஐடியல் கல்வி நிலையம்
42, பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணம்.
(தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில்)

ஆண்டு 5 முதல் O/L வரை
புதிய பிரிவு வகுப்புகள்
ஆரம்பம்: 01 - 01 - 1995
ஞாயிறு காலை 9 00மணி

★ விசேட ஆங்கிலம், சிங்களம் வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ SPOKEN ENGLISH
(With Basic Grammar)

திரு. T. சகாதேவன் (B.A. London)

முதல் பிரிவு ஆரம்பமாகிவிட்டது.

[34447]

45ஆம் நாள் வீர அஞ்சலி

2ஆம் லெப். அருளப்பன்
(இ. நகுலேசபிள்ளை [ஜே.பி.] ஜெயக்குமார்)
சாவணை மேற்கு

வீரப்பிறப்பு: 5 — 12 — 1975
வீரச்சாவு: 17 — 11 — 1994

அன்னை மண்மீட்க போர்க்களம் சென்று போராடி வீரச்சாவெய்திய அன்னாரது 45ஆவது நினைவு நாளில் எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,
சாவணை.

[34450]

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பிறேமலதா சபாநாதன்
அவர்களின் தாயார்

திருமதி
கனகம்மா காமாட்சிசுந்தரம்

இறைவனடி சேர்ந்தார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.,
கைதடி. (பி-10126)

31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி வனசமலர் சண்முகநாதன்

பிறப்பு 3-2-1947
இறப்பு 2-12-1994

காலம் ஏன் எம்
கண்களில்
கண்ணீரின் முகவரியை எழுதியது.
அம்மா!

எங்களை
அடைகாத்து வைத்திருந்த
அரவணைப்பு
அன்பிற்கே
அகராதி செய்த
அழகு முகம்!

எல்லாமே
இனிமேல்
இனிய நினைவுகள் தான்.
பேரன் முகம் கண்டு
பிள்ளைத் தமிழ் பேசி - மனம்
பாரம் குறைத்து - உயர்வு
பார்த்திருக்க - மறந்து
பறந்தது ஏன்?
கோலாகலமாக நாங்கள்
குடியிருந்த கோயில் - இன்று
கும்பிடுவாரின்றி - ஓ - - -
கருவூலம் நீயன்றோ!
களவு போய் விட்டாய்!

அன்பை
அரவணைப்பை
அயராத உழைப்பை - எமக்கு
அள்ளி அள்ளித் தந்த
அட்சய பாத்திரம்!

ஆனால் - - -
கண்ணீர்க்
காணிக்கைதான் - இன்று எங்கள்
கைமாறு!

ஆனாலும்
காலம் - உங்கள்
கனவுகளை நனவாக்கும்
காத்திருக்கின்றோம் - அவை
கால் கொள்ளும் நாள் பார்த்து.

உங்கள் பிரிவால் துயருறும்
பிரமிளா, சகிலா, நிகிலா
(பிள்ளைகள்)
கௌதம்
(பேரன்)

10/2, சிவன்கோயில் வீதி.
திருநெல்வேலி தெற்கு. (34452)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சை தமிழ் மாநாட்டில் ஜனாதிபதி பங்குபற்றார்

ஜெயலலிதாவுக்கு அறிவிப்பு

சென்னை, டிச. 31

ஜனவரியில் தஞ்சையில் நடைபெறவுள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசர வேலையின் நிமித்தம் மாநாட்டில் தன்னால் கலந்து கொள்ள முடியாதுள்ளது என்று ஜனாதிபதி சர்மா தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்குப் பதிலாக உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் மாநாட்டில் கலந்து கொண்டு அதனைத் தொடக்கி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

இலங்கை விஜயம் தடைப்பட்டால்

பாப்பரசருக்கு ரூ. 30லட்சம் வழங்க வேண்டிவரும்

கொழும்பு, டிச. 31

எந்தக் காரணத்தினாலும் பாப்பரசரின் இலங்கை விஜயம் நடைபெறாவிடின் அதற்கு 30லட்சம் ரூபா காப்புறுதிப் பணத்தைச் செலுத்துவதற்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கட்டுப்பட்டுள்ளது.

இவ்வாறு காப்புறுதி கூட்டுத்தாபனத்தின்பொதுமேலாளர் திரு. பீ, டி. பின்னவெல "லங்கா தீப"வுக்குத் தெரிவித்துள்ளார். (ஒ-க-6)

பொலீஸ் பதவி உயர்வு குறித்து விசாரணை நடக்கும்

கொழும்பு, டிச. 31

சட்டவிரோதச் செயல்கள் சிலவற்றில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள், பொலீஸ் அத்தியட்சகர்கள், பிரதம பொலீஸ் பரிசோதகர்கள் 50 க்கு மேற்பட்டோர் பதவி உயர்வை எவ்வாறு பெற்றனர் எனவும்—

அதன் சூத்திரதாரிகள் எவர் எனவும் பூரண விசாரணை நடத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் மாதம் சராசரி 60 கொலைகள்!

கொழும்பு, டிச. 31

இலங்கையில் மாதம் ஒன்றுக்கு சராசரி 60 கொலைகள் இடம்பெறுகின்றன. இதேவேளை இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை 5 ஆயிரத்து 983 திருட்டுகள் நடைபெற்றுள்ளன.

வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த செப்டெம்பர் மாதம் வரை 954 கொலைகள் நடந்திருப்பதாகவும் பொலீஸ் தலைமையகத்தின் தகவல் புள்ளி விவர அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வருடம் இதுவரை இடம்பெற்ற கடத்தல் சம்பவங்கள் 152 என்றும், திவைப்புச் சம்பவங்களின் எண்ணிக்கை 807 என்றும், கற்பழிப்புச் சம்பவங்கள் 110 என்றும், மோசடிச் சம்பவங்கள் 912 என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலக வேலைகளுக்கு ரூ. 10லட்சம்

வலிகாமம் தெற்கு, டிச. 31

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தின் ஊடாக 1995 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான வேலைத் திட்டங்களுக்கென பத்து இலட்சத்துக்கும் கூடுதலான தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டம் சம்பந்தமாக பிரதேச செயலர் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. சு. தேவராஜன் மற்றும் இப் பகுதியில் உள்ள சனசமூக நலனோம்பு மூலவள நிலையங்கள், தமிழீழ ஊரகமேம்பாட்டு பங்கேற்பலை, ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பவை போன்றவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

1995 ஆம் ஆண்டில் இப் பகுதியில் கல்வி, விவசாயம், சுகாதாரம் உள்ளூராட்சி திணைக்களம் போன்ற துறைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

பாடசாலைகளில் மலசல கூடங்கள் அமைத்தல், குழாய்க் கிணறு அமைத்தல், மைதானம் திருத்தம் போன்ற வேலைகளும் —

விவசாய திணைக்களத்தினூடாக விவசாயிகளுக்கு பயிர் செய்கைக்கான தொழில் நுட்ப அறிவு வளர்க்க ஆலோசனை வழங்கல், நன்னீர் வேலைகள், பயிர் வளர்ப்பு போன்ற வேலைகளும் —

சுகாதார திணைக்களத்தினூடாக சத்துணவு வழங்கல், பொதுச் சுகாதாரம் பேணல் போன்ற வேலைகளும் —

உள்ளூராட்சி திணைக்களத்தினூடாக வீதிகள் திருத்தம், சனசமூக நிலையங்களுக்கான நூல் வழங்கல் தளபாட கொள்வனவு வேலைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

சுன்னாகம் பகுதியில் பழரசம், பொது விளையாட்டரங்கு அமைத்தல் மற்றும் மகளிர் நூல் நிலையம் அமைத்தல், பாடசாலைக்கு செல்லாது பிச்சை, களவு போன்றவற்றில் ஈடுபடும் சிறுவர்களை சீர்திருத்த பள்ளிகளுக்கு அனுப்புதல் போன்ற வேலைகள் மேற்கொள்வது பற்றியும் ஆராயப்பட்டது.

தமிழீழ நிர்வாக சேவையை சேர்ந்த திரு. டொமினிக், யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. இளம்பருதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (சு-152)

மெய்யியல் — அளவையியல்

மாணவர்களுக்கு

ஓர் நற் செய்தி!

ஆரம்பமாகிறது

02 - 01 - 1995

மெய்யியற் கல்வி அகம்

(ACADEMY OF PHILOSOPHY)

சனி — ஞாயிறு தவிர்ந்த கிழமை

நாட்கள் காலை - மாலை வகுப்புக்கள்

வே. யுகபாலசிங்கம்

B. A. (Hons.) Phil.

M. A. (Phil) Ed-in-Dip

46/2, கொழும்புத்துறை வீதி,

சுண்டிக்குளி.

[34442]

பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பில் இயங்கிய

ஸ்ரீலங்கா உளவுப் பணியகம் பொலீஸ் மா அதிபரின் கீழ்

கொழும்பு, டிச. 31

ஸ்ரீலங்காவின் தேசிய உளவுப் பணியகம் பொலீஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பில் அடுத்த ஆண்டில் இருந்து இயக்கும் என்றும்—

இந்தப் பணியகம் சர்வதேச தரத்துக்கு தரம் உயர்த்தப்படும் என்றும்— பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

இந்தப் பணியகம் தற்சமயம் பாதுகாப்பு அமைச்சின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கி வருகிறது.

பாதுகாப்பு இணைப்பு பிரிவுகளில் கடமையாற்றும் பொலீஸார் புனரமைக்கப்படவிருக்கும் தேசிய உளவுப் பணியகத்தில் கடமையாற்றுவர் என்றும் அனுருத்தரத்வத்த தெரிவித்தார். (இ-3)

சமாதானப் பேச்சு நடத்துவதில் அரசுக்கு இப்போது ஆர்வம் இல்லை

விக்கிரமபாகு கருணாரத்ன கண்டனம்

கொழும்பு, டிச. 31

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகத் தெரியவில்லை. சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அரசு ஆரம்பத்தில் காட்டிய ஆர்வத்தையும் இப்போது காணமுடியவில்லை. இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த குறுகிய காலத்தில் மக்கள் அதன் மீதான நம்பிக்கையை இழக்கும் நிலைமை உருவாகி வருகிறது.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் (என். எஸ். எஸ் பி) பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று கட்சியின் 17 ஆவது வருடாந்த மாநாடு நடைபெறவுள்ளது. அதனை ஒட்டி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வாக்குதேவ நாணயக்காரா எம்மோடு இல்லாததால் எமதுகட்சி பலமிழக்கவில்லை. நாம் எமது பலத்தை மேலும் வலுவடையச் செய்து எல்லாச் சவால்களையும் சமாளிக்கத் தயாராயுள்ளோம்.

தற்போது எமது கட்சியுடன் ஜே.வி.பியும் உடன்பட்டு இணையும் நிலை ஏற்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் அரசாங்கத்துக்கு நாம் பிரதான சவாலாக அமையப் போகிறோம்

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [ஐ]

புலிகளின் குரல் வானொலியில்

31 — 12 — 1994

சனி இரவு

★ 8-01 — அறிவியற் கலசம்
★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — சித்திரம் — ந. கிருஷ்ணா எழுதிய "பாமரத் தமிழில் பாவிசைத்த புலவன்"
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

01 — 01 — 1995

ஞாயிறு காலை

★ 7-03 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

கடந்த 11 மாதங்களில் மட்டும்

யாழ். ஆஸ்பத்திரியில் 320 சிறுவர் உயிரிழப்பு!

செப்ற்றிசீமியாவால் 118 பேர் பலி

யாழ்ப்பாணம், டிச. 31

கடந்த 11 மாதங்களில் 5 வயதுக்கு உட்பட்ட 320 சிறுவர்கள் நோய்ப்பாதிப்புக்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளனர். செப்ற்றிசீமியாவினால் மட்டும் 118 சிறுவர்கள் மரணமாகியுள்ளனர்.

மலேரியா நோய் பாதிப்பாலும் 15 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

உயிரிழந்த அனைவரும் ஒரு வயதுக்கும் 5 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

குடாநாட்டுக்கு பொருள்கள் ஏற்றிவர

மற்றொரு பெரிய கப்பலும் இனி சேவையில் ஈடுபடும்

யாழ்ப்பாணம், டிச. 31

குடாநாட்டுக்கு உணவுப் பொருள்களை எடுத்துவர விருக்கும் இரு கப்பல்களுக்கும் புறம்பாக மற்றுமொரு பெரிய கப்பலும் வடக்குக்கு வர்த்தக ரீதியான பொருள்களை எடுத்துவரச் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

யாழ். அரச அதிபர் திரு க. பொன்னம்பலம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவை நாயகத்தால் நிர்ணயிக்கப்படும் கப்பல் கூலியுடன் இக்கப்பலில் பொருள்கள் எடுத்து வரப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள், தனியார் வியாபாரிகள், அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன இக்கப்பலில் பொருள்களை எடுத்துவர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'டிரக்'கில் முதிரைப் பலகை கடத்திய சிப்பாய்கள்!

கொழும்பு, டிச. 31

சீருடை அணிந்த சிப்பாய்கள் இருவர், இராணுவ "டிரக்" வண்டியில் ஏராளமான முதிரைப் பலகைகளைக் கடத்திச் சென்ற போது நடமாடும் இராணுவப் பொலீஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் ஆணைமடுவ பிரதேசத்தில் நடைபெற்றது.

புத்தளத்தில் நிலை கொண்டிருக்கும் கஜபா படைப் பிரிவைச் சேர்ந்த இரு சிப்பாய்களே இந்த கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டு பிடிபட்டவர்கள் ஆவார். (ஒ-9)

தமிழீழ கலைஞர்களுக்கு எம்.ஜி.ஆர். நினைவு விருது

யாழ்ப்பாணம், டிச. 31

அமரர் எம். ஜி இராமச்சந்திரனின் ஏழாவது ஆண்டு நினைவாக கலைஞர்கள் பலருக்கு "எம். ஜி. ஆர் விருது" வழங்கப்பட்டது.

கடந்த 26ஆம்திகதி கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திறந்த வெளி அரங்கில் நடந்த விழாவில் வைத்தே விருதுகள் வழங்கப்பட்டன. அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவையின் தலைவர் பொன். மதிமுக ராஜா விருதுகளை வழங்கினார்.

விருதுகள் பெற்றுக்கொண்ட கலைஞர்கள் விபரம் வருமாறு:—

பி. பழனி வேலாயுதன் (தவில்) — லயஞானபூபதி.

எஸ். வடிவேல்(வில்லிசை) — வில்லிசை வேந்தன்

எம். எஸ். சண்முகநாதன் (நாதஸ்வரம்) — ஸ்வரஞான பூபதி.

க. கனகராஜா — அறப் பணிச்சக்கரவர்த்தி.

மு. கோபாலகிருஷ்ணன் (கண்ணன்)— மெல்லிசைச்சக்கரவர்த்தி

இ. கெங்காதரன் — உலோகக் கலைமாணி.

இரா. பற்குணம் — நடிக மாமணி.

மு. வர்ணகுலசிங்கம் — கானாமிர்தநிலகம்.

பெர. சுப்பிரமணியம்—ஒவிய மாக்கலைஞர்.

திரு. அமரசிங்கம் — திரைப்பட வானர்

(ஒ)

தப்பி ஓடிய சிப்பாய்கள் கொள்ளையருக்கு ஆயுதம்

கொழும்பு, டிச. 31

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய பலர் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவது மட்டுமன்றி, கொள்ளையர்களுக்கு ஆயுதங்களையும், வெடிப்பொருள்களையும் விநியோகிப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இராணுவத்தை விட்டு தப்பி ஓடியவர்களை உடனடியாகத் தேடி கைது செய்யும்படி பொலீஸ் நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

அண்மையில் வியாங்கொட வெடிக்கிடங்கு நிறுவனத்தில் 60 லட்சம் ரூபா சம்பளப் பணத்தை கொள்ளையிட்டவர்களுக்கு தப்பி ஓடிய சிப்பாய் ஒருவரே ஆயுதங்கள் வழங்கியுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரே இந்தக் கொள்கைக்கு பெரும்தொகையான நவீன ரக ஆயுதங்களையும், ஆர். டீ. எக்ஸ் மற்றும் ரீ. என். ரீ. வெடி மருந்துகளையும் வழங்கி உதவியுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஆர் டீ எக்ஸ் மற்றும் ரீ. என். ரீ. போன்ற வெடி மருந்துகள் விடுதலைப் புலிகளினாலேயே பெருமளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் இவை எவ்வாறு கிடைக்கின்றன என்பது குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-9)

பிறந்த தின வாழ்த்துக்கள்

★ செல்வன் ஸ்ரீகுணேசன் ★

மீசாலையைச் சேர்ந்த

திரு. ஸ்ரீ ராகவராஜன்-சுபத்திரா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஸ்ரீ குணேசன்

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (31-12-94) கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(8164)

தையல் பயிற்சியாளர்கள் வேலை வாய்ப்பு பெறுவோர்

எமது நிலையத்தில் தையல் பயிற்சிபெற விரும்புவோரும், பல வகையான தையல் வேலை வாய்ப்பு பெறுபவர்களும் 15 - 01 - 1995 ற்கு முன் விண்ணப்பிக்குக!

★ பயிற்சிக் காலம், வேதனம் என்பன நேரில் பேசித் தீர்க்கலாம்.

சிற்றி காமன்ஸ்

"சிவபதி" இணுவில் மேற்கு,

[சி-71]

மாதரும்

சஞ்சிகை நடத்தும்

தமிழ்த் தாய் மன்றத்தின்

தேசாபிமானி - 1994

விருது வழங்கும் வைபவம்



கலாநிதி க. கனகராசா

தலைவர்: பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) (யாழ். பல்கலைக்கழகம்)

இடம்: நாவலர் கலாசார மண்டபம், நல்லூர்.

காலம்: 02-01-95 திங்கள் பி ப. 3.00மணி

★ தமிழ்த்தாய் மன்றத்தின் இந்த ஆண்டிற்கான உயரிய தேச விருதான 'தேசாபிமானி விருது' தொழிலதிபர் கலாநிதி க கனகராசா அவர்களுக்கு வழங்கப்படுகிறது
★ சேவையால் உயர்ந்த செம்மல் கனகராசா அவர்களை விழாவில் மாலையிட்டோ, வாழ்த்துப்பா வழங்கியோ கௌரவிக்க உங்களுக்கும் உரிமை உண்டு என்பதை அறியத்தருகிறோம்.
★ நேர ஒதுக்கீடு சிக்கல்களைத் தவிர்க்க முற் கூட்டியே மாற்றம் சஞ்சிகை, கலா மண்டப முன் ஒழுங்கை, சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அறியத்தருவது விரும்பத்தக்கது.
★ விழாவில் 'மாற்றம்' சஞ்சிகையின் 95ஆம் ஆண்டு நாட்காட்டி இலவசமாக வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

வாழ்த்துவோர்:

லிங்கம் கூல்பார்

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

(34443)

புதிய பிரிவுகள்

ஆண்டு

4, 5, 6, 7, 8, 9, 10

O/L

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

ஆரம்பம்:

01 - 01 - 1995

BOND

கல்வி நிறுவனம்

51 A, ஸ்ராலை வீதி,

யாழ்ப்பாணம்.

[8166]

நிர்வாக சேவை பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 31

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர் வரும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர் தர் வெதமுல்ல யாழ். செயலகத்துக்கு தகவல் அனுப்பியுள்ளார். (ஒ-3)

தமிழ் - சிங்கள அகராதி

கொழும்பு, டிச. 31

வரலாற்றில் முதல் முறையாக தமிழ் — சிங்கள அகராதி ஒன்று நேற்று முன் தினம் கொழும்பில் வெளியிடப்பட்டது. பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற வெளியீட்டுவிழாவுக்கு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

திரு. கே. என். டி. பீரிஸ் பத்தாண்டு காலம் முயற்சி எடுத்து இந்த அகராதியைத் தயாரித்துள்ளார். [க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ் (6x8), அலுமாரி, சாப்பாட்டு மேசை, கதிரை, டிரெஸிங் ரேபிள், கட்டில்கள், கிச்சன் கபேட், குசன் செற்றி மற்றும் வீட்டுத் தளபாடங்கள் [குறிஞ்சி மெடிக்கல் அருகில்], பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. [34423]

நல்லின இஸ்ரேல் (Israel-blue) முந்திரிகைக் கன்று விற்பனைக்கு உண்டு. உடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணை, இராஜ வீதி, கோப்பாய். (சி-10122)

மிகவும் நல்ல நிலையிலுள்ள (A. J. 2-90) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக் கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (34437)

இறிஸ்மஸ் சோடனை, அழகுசாதனப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் வகைகள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: ஜெயா அழகுமாடம், இல. 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9838)

எல்லா வகையான Prima கோழித்தீன்கள், கால்நடை மருந்து வகைகள் குவறந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [34439]

அடைவைக்கக் கூடிய நல்லின கோழி முட்டைகள், வான் கோழி பன்டம் முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரவாழைக்குட்டிகள், குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34441)

பால் விற்பனை

எமது சங்கத்திற்கு திருநெல்வேலி சந்தையை அண்டிய பகுதியில் பால் மற்றும் உப பொருள்கள் விற்பனை செய்வதற்கு முகவர் தேவை. விரும்புபவர்கள் கீழ்க் காண் முகவரியில் தொடர்பு கொள்ளவும் பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். [சி-10115]

டயறி கலண்டர்

உங்களுக்கு தேவையான எல்லா அளவுகளிலும் டயறி வகைகள், கலண்டர்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-85]

அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர் அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936

புத்தகங்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் Bright இன் புத்தகங்கள் கணிதம் ரூபா 60/- தமிழ் 50/- 20 மாதிரி வினாத்தாள்கள் 80/- இலகு முன்னோடிப் பயிற்சிகள் 80/ பூபாலசிங்கம் மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (34303)

ஜோதிட விஞ்ஞானம்

1995 புத்தாண்டு பலன்களும் 3-1-95 முதல் செவ்வாய் வக்கிரமும் எல்லா ராசிப் பலன்கள் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். (நூலாசிரியர் – சத்யா) பாடசாலை அலுவலக உபகரணங்களுக்கு மது பொத்தகசாலை, கொக்குவில் சந்தி. (7845)

இறைச்சிக்கோழிகள்

Broiler இறைச்சிக்கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: "சிவகாமி வாசம்", சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு. [34385]

கலண்டர்கள்

பொக்கற் கலண்டர்கள் சகல விதமான தினத்தாள் கலண்டர்கள் அன்பளிப்பு அடிக்கும் கலண்டர்கள் பெரிய, சிறிய சிலிப் தனியாக மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். காந்தி அறிவகம், இல. 330, காங்கேசன் துறைசாலை, யாழ்ப்பாணம். (34304)

ஓடர்கள் கவனிக்கப்படும்

சிறுவர் பெரியோர்களுக்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி பிளவுஸ், ஆண்களுக்கான ரவுஸர் ஷேர்ட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்து பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள் தொடர்பு: சிறிரி காமன்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. இளை: சிவபதி, இணுவில் [சி-74]

நாட் குறிப்பேடு

நகை மாளிகை மற்றும் வர்த்தக பிரமுகர்களுக்கும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் புத்தாண்டு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு மிகச் சிறப்பான பெரிய நாட்குறிப்பேடு (டயறி) விலை ரூபா 65/- மட்டும். மற்றும் திருமண அழைப்பிதழ் பத்திரங்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஆனந்தா அச்சகம், 226. காங்கேசன் துறைச் சாலை, யாழ்ப்பாணம். (சி-10111)

மணமகள் தேவை

29 வயது, கத்தோலிக்க மதம், வியாபார ஸ்தாபனத்தில் காசாளராகக் கடமையாற்றும், குடிப்பழக்கமற்ற, நற்பண்புகளுள்ள மகனுக்கு தாயார் மணமகளைத் தேடுகின்றார். இந்து மதத்தவரும் ஏற்றுக் கொள்ளப்படுவர். இல. 743, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34433)

கைமாறிவிட்டது

27 12-94 அன்று தாண்டிக்குளம் தமிழீழ சோதனை நிலையத்தில் இரு விலையுயர்ந்த காஞ்சிபுரம் சாறிகள் கைமாறிவிட்டன. அதை கண்டெடுத்தவர்கள் பின் வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். திருமதி ச. கந்தையா கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதி, கோப்பாய். (8165)

இறைச்சிக் கோழி

எல்லா வகையான இறைச்சிக் கோழிகளும், காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34440)

ரி. வி. டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள், ரி. வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம்சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்; கண்டி வீதி, சாவகச்சேரி, மாவிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9911)

பேராதனைப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கல்வியாண்டு - 96

பின்வரும் கற்கை நெறிகள் யாழ்ப்பாணத்தின் முன்னணி விரிவுரையாளர்களைக் கொண்டு ஆரம்பமாகிறது.

01 - 01 - 1995

கலை முதல் தேர்வு – G. A. Q.

★ க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ பேராதனை கலைமாணி பட்டப் பாடநெறி ஆயின் 180 புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.
★ விண்ணப்ப முடிவு திகதி: 01–01–1995

மேலதிக விவரங்களுக்கு:

நிரு பட்டப்படிப்பு பிரிவு
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்.

(சி–57)

5-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு: 19 — 02 — 1945



அரக்கரின் அழிப்பு: 31 - 12 — 1989

அமரர் மனவல் எஸ்பீரியல்

(முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்)

ஆண்டுகள் ஐந்தாகியதோ தெய்வமே நீர் பிரிந்து
கூண்டு விட்டுக்கிளி பறக்க குமுறியே நாம் தவிக்க
மூண்டு கிட்ட பெருநெருப்பாய் எம்மிதயம் வேகுதிங்கே
மீண்டும் நீர் வருவதெப்போ எம்துயர்தான் –
நீர்வதெப்போ!

அன்றுமக்கு நிகழ்ந்திட்ட அவலமதை மறப்போமா –
உம்மைக்
கொன்றொழித்த பாவியர்கள் செய்த கொடுமைகளை –
மறப்போமா
குன்றிலிட்ட தீபமாய் ஒளிகொடுத்த எமதில்லம்
துன்பஇருள் சூழ்ந்துமே ஒளியிழந்து போனதிங்கே!

ஐந்தாண்டு காலமாய் நாமடைந்த தொல்லைக்கோர் –
எல்லையில்லை
வந்தெமக்கு உதவிடவோ இந்த வையகத்தில் –
யாருமில்லை
எந்தவழி செல்கின்றோம் என்றுமே புரியவில்லை
தந்தையே! உம்துணையின்றித் தவித்துமே –
வாடுகின்றோம்.

நிக்சற்றுத் தவித்து நிற்கும்:
அன்பு மனைவி, மக்கள்.

இல 3, 2ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
(8159)

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

94 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான மீட்டல் (Sat. Sun.)

PHYSICS	—	திரு. சோதிலிங்கம் பிரிவு – I 9-00 மணி பிரிவு – II 4-00 மணி
ZOOLOGY	—	திரு. தம்பிராஜா 8-00 மணி
PHYSICS	—	திரு. கணேசன் 10-00 மணி
CHEMISTRY	—	திரு. மணியம் 11-00 மணி
BOTANY	—	திரு. குணசீலன் 12-00 மணி
PU/APP. MATHS	—	திரு. குணசிங்கம் Tue. Thu. 4 00 — 6 00

ஆரம்பம்: 31 - 12 - 1994

[சி–10123]

புத்தாண்டு விற்பனைகள்

✶ நவநவமான புதுவருட வாழ்த்து மடல்கள்
✶ புதுவருட கேக் பொருள்கள்
✶ புதுவருட சோடனைகள்
✶ குளிர்பான தயாரிப்புகள்

மற்றும்

சுவர் - கைக்கடிகாரங்கள் எவர் சில்வர், விளையாட்டுப் பொருள்கள்

✶ பொலீத்தீன் வகைகள்
✶ மண்எண்ணெய் அடுப்புகள் நெல்லுடைக்கும் - மா அரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்

அனைத்தையும்

ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள:

ராஜா ஸ்ரோர்ஸ்

67, 69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

[சி–10101]

கேள்வி விலை கோரல்

கரவெட்டி, தச்சன்தோப்பு

விநாயகர் ஆலயக் கோபுர வர்ணம் தீட்டுதல்

கரவெட்டி, தச்சன் தோப்பு விநாயகர் ஆலயத்தின் இராசகோபுரம், மற்றும் தூபிகள் ஆகியவற்றுக்கு மீள வர்ணம் தீட்டுவதற்கான கூலிக்குரிய கேள்வி விலை விருப்பமுடைய வர்ணம் தீட்டுபவர்களிடமிருந்து மேற்படி ஆலய பரிபாலன சபையால் கோரப்படுகிறது.

விருப்பமுடையவர்கள், முகாமையாளர் தச்சன் தோப்பு விநாயகர் ஆலயம், கரவெட்டி என்னும் முகவரியுடன் 10 – 01 – 1995 இற்கு முன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

க. சிவகுருநாதன்
(முகாமையாளர்)

[34435]

---

5 ஆம் ஆண்டு
நினைவலைகள்

தாயின் மடியில்: 19 — 10 — 1983

நோயின் பிடியில்: 31 — 12 — 1989

செல்வன் தினேஷ் சற்குணாநந்தன்

ஐந்தாண்டு ஆனதையா நீ ஐயனடி சேர்ந்து,
ஐந்து யுகமானாலும் ஆறாதையா எம்துயர்,
ஐயனவன் பாதத்தில் நீ அமைதி கொள்வதை நாம்
ஐயமின்றி நம்புகிறோம் அதனால் அமைதி –
கொள்கிறோம்.

அப்பா, அம்மா, தம்பிமார்,
சகோதரி உறவினர்கள்.

160, இராமலிங்கம் வீதி,
சருகுநெல்லி, ஆனைக்கோட்டை.

(34397)

A/L 95 மீட்டல் வகுப்புகள்

சனி – ஞாயிறு

9-00	—	Chemistry	திரு. சிவசோதி
11-00	—	Physics	திரு. ஜெயசீலன்
12-00	—	Chemistry	திரு. சிவசோதி
2-00	—	Zoology	திரு. ஞானேந்திரன்
2-00	—	Applied	திரு. குணம்
3-00	—	Botany	திரு. S. குமார்
3-00	—	Pure Maths	திரு. குணம்
4-00	—	Chemistry	திரு. சிவசோதி

★ மிகக் குறுகிய காலத்தில் பாடத்திட்டம் பூரணமாக்கப்படும்
★ 4-00 மணி பிரிவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் நிறைமை அடிப்படையில் வழங்கப்படும்.

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளும்

ஆரம்பம்: 01 - 01 - 1995

BOND கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[8168]

"நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்"
(ஆகாய் 2:19)

செழுமை நிறை புதுவருட (1995) ஆசீர் பெற வாருங்கள்

இன்று இரவு (31–12–1994)

10-30மணிக்கு எமது ஆலயத்தில் நடைபெற விருக்கும் புதுவருட ஆசீர்வாத ஆராதனையில் கலந்து தேவ ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுச் செல்ல வாஞ்சையுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இத்துடன் அனைத்து தமிழீழ மக்களுக்கும் எமது நத்தார் புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்து ஆசீர் கூறிநிற்கும்,

மேய்ப்பர்கள்,
உடன் ஊழியர்,
விசுவாசிகள்.

எபனேசர் ஜெப நிலையம்,
வட்டுக்கோட்டை. (34436)

இரத்தத்தைக் கண்ணீராக்கி
எங்கள்
இதயத்தின் அஞ்சலிகள்

தாயின் அணைப்பில்: 03 — 08 — 1977

தீயின் எரிப்பில்: 10 — 01 — 1994

செல்வன் செ. சுதர்சன் (சேனா)

எங்கள்வீட்டில் வந்துதித்த இளையவனே எங்கள் சுதன்
உங்கள் முகம் காணாது உருகுகின்றோம் நாங்களையா!
பொங்கியெழும்கண்ணீரைப் போக்கிடயாருமில்லையே!
மங்கியே போனதோ எங்கள் மைந்தன் –
மதிமுகமும், மலர்விழியும்
தாய் முகத்தைக் காணாமல் யார் முகத்தைப் –
பார்த்தழுதாய்
தந்தையுடன் பேசாமல் எங்கு ஐயா! போய்மறைந்தாய்
தீயவரின் நட்புக்கொண்டாய்தீயினிலேவெந்துபோனாய்
யாரிடத்தில் சொல்லியழ யாரெமக்கு ஆறுதல் கூற
எழுவர்க்குத் தம்பியாகி இளையவனாய்ப் பிறந்தவனே!
அழுவதற்கு எம்மை விட்டு அழிந்தாயோ!
அன்பைப் பிரிந்து
கொஞ்சி மகிழ்ந்த மைந்தன் எங்கே!
குளறியழும் பெற்றோர்
தம்பி என்று அழைத்து மகிழ எங்கள்
தங்கமகன் இல்லையே!
'சேனா' என்று உன்னைச்செல்லமாக அழைத்தநண்பர்
ஏனோ இங்கு ஏங்கி ஏங்கித் தவித்தனரே!
தானாக வந்த விளை எங்கள் தங்கமகனைப்
பலியெடுத்ததோ!
காணாமல் கதறுகின்றோம் கண்ணீர்தான்மிச்சமையா!
செல்ல மருமகன் மாண்டவேளை சின்னமாமா!
நீ எங்கு போனாய்
கள்ள வழி மிடித்து எங்களுக்குக் காணாமற்
போனது ஏன்?
வண்ண மகன் வாடியதேன் வளர்பிறையும் ஓடியதேன்!
கண்ணிழந்து குருடாகி அலைகின்றோம் நீயின்றி.

ஐயா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், அத்தான்
மற்றும் உறவினர்கள்.

வல்வெட்டித்துறை – நாவலடி,
ஊரிக்காடு. (8157)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

குடாநாட்டின் உணவு விநியோகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உணவுப் பொருள் விநியோகத்தை மாற்றி அமைப்பதற்காக, புதிய அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் புதியதிட்டம் ஒன்றை வகுத்திருக்கிறார். தமது உத்தேச விநியோக முறையை தடங்கலின்றி இலகுவாகச் செயற்படுத்துவதற்கான சில ஒழுங்குகளை கொழும்பு அதிகாரிகளுடனும் செய்து வந்திருக்கிறார் அவர்.

குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட்ட பாவனைப் பொருள்களைக் கப்பல் மூலமே கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் நீண்ட நாளைய விவகாரம்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களை, கடந்த சுமார் நான்கு வருடங்களாக அரசாங்க அதிபர் செயலகமே பொறுப்பேற்று கப்பல் மூலம் கொண்டு வருகிறது. எனினும் கப்பல் சேவை போதியளவில் நடைபெறாததால் உணவுப் பொருள்களுக்கு அடிக்கடி பற்றாக்குறையும், தட்டுப்பாடும், விலை உயர்வும் ஏற்படுவது வழக்கமாகிவிட்டது. மிகக் குறிப்பாக கப்பல் போக்குவரத்து நடத்த முடியாத சீரற்ற காலநிலையின் போது நிலைமை மிக மோசமடைவது உண்டு.

யாழ். மாவட்டத்தில் வதியும் 1,86,000 குடும்பங்களுக்கும், 56,000 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குமாகச் சேர்த்து மாதாந்தம் மொத்தம் ஒன்பதாயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள் எடுத்து வரப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. இது மக்களின் ஆகக் குறைந்த உணவுத் தேவையை ஈடு செய்யப் போதுமானதா என்பது தவியாக ஆராயப்பட வேண்டியது.

அது மட்டுமன்றி, இப்போதுள்ள உணவு விநியோக முறை சரியாக, சீராக இல்லாததால் மக்களுக்குத் தேவைப்படும் நேரத்தில், தேவையான பொருள்களை நியாய விலையில் வாங்க முடியாதுள்ளது. வெளிச் சந்தையில் பல மடங்கு விலை கொடுத்து வாங்குவதற்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பணவசதி இல்லாதோர் பல பொழுதுகள் பட்டினி கிடக்கும் நிலையும் உண்டு.

பண்டிகைக் காலங்களில் கூட தமக்குத் தேவையான பொருள்களை பெற்றுக் கொள்ள முடியாதவாறு விற்பனை நிறுவனங்கள் நடந்து கொள்வதாக அதிருப்தியும், கவலையும் தெரிவிக்கும் பாவனையாளர்களும் உள்ளனர்.

மக்களின் இந்தக் கஷ்டங்களை போக்கும் நோக்கத்துடனேயே புதிய அரச அதிபர் புதிய விநியோக முறையை அடுத்த மாதம் (ஜனவரி) தொடக்கம் நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளார் என்று நம்புகிறோம்.

கப்பலில் வந்து சேரும் பொருள்களை மூன்று பிரிவுகளூடாக — புனர்வாழ்வுப் பகுதி, உணவுத்திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் — ஆகியவற்றினூடாக விநியோகிப்பது என்பதே உத்தேச புதிய திட்டமாகும்.

கப்பலில் வந்து சேரும் பொருள்கள் விரைவாகவும், உரிய நேரத்திலும் மக்களுக்குக் கிடைப்பதற்கு இந்தத் திட்டம் எந்தளவுக்கு உதவும் என்பது அது நடைமுறைக்கு வந்த பின்னர் தான் தெரியும்.

ஆனால் மக்கள் தமக்கு வேண்டிய பொருள்களை வேண்டிய வேளையில் வாங்குவதற்கும், தாராளமாகப் பெறுவதற்கும் இந்தத் திட்டம் எந்த வகையிலேனும் உதவும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

அப்படி ஒரு நிலைமை உருவாக வேண்டுமானால் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்படுவதும், பாவனைப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு உள்ள நடைமுறைத் தடைகள், சோதனைகளை நீக்குவதும் மிகவும் அவசியம்.

இது விடயத்தில் கொழும்பு அரசாங்கம் உடனடிக் கவனம் எடுக்காவிடில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவு விநியோகம் சீராகும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கும்.

விடைபெற்றுச் செல்லும் ஆண்டு விட்டுச் செல்லும் நிகழ்வுகள்

ஐ.தே.க.வின் 17 வருட ஏகபோக ஆட்சி அஸ்தமனம்; சமாதான முயற்சிகளுக்கு சந்தர்ப்பமளித்த ஆண்டு

1994 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்திலும் நீடித்த ஒருவித மந்த நிலை முடிவுக்கு வந்தது.

அடுத்து வந்த ஆறுமாத காலமும் அரசியலிலும் யுத்த களத்திலும் சூடுபிடிக்கும் சம்பவங்கள் பல நடந்தேறின.

பலாலி விமானத்தளத்துக்குள் ஊடுருவிய கரும்புலிகள் துணிகரத் தாக்குதலை நடத்தினர்.

தொடர்ந்து கடற்படையினரை முடக்கும் முயற்சியில் புலிகள் தங்கள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர்.

இதற்கிடையில் தெற்கில் பொதுத்தேர்தல் திருவிழாகளைகட்டத் தொடங்கியது.

கடற்படைக் கப்பல்கள் மீதான வெற்றிகரத் தாக்குதல்கள் புலிகளின் போர்த்திறமைக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தன.

பொதுத் தேர்தலில் ஐ.தே.க. தோல்வியைச் சந்தித்தது. சந்திரிகா பிரதமரானார்.

இந் நிலையில் சமாதானத்துக்கான — முன் எப்போதும் இருந்திராத — எதிர்பார்ப்பு நாட்டில் துளிர்விட்டு வளர்ந்தது.

இரு தரப்பிலும் நல்லெண்ண நடவடிக்கைகள் பல இடம்பெற்றன.

விடுதலைப் புலிகளுக்கும் புதிய பிரதமருக்கும் இடையே கடிதங்கள் பரிமாறப்பட்டன.

இவற்றின்விளைவாக யாழ்ப்பாணத்தில் அரச பிரதிநிதிகளுக்கும் – விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றன.

பொதுத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்து ஆட்டங்கண்ட ஐ. தே. கட்சி தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் தூக்கி எறியப்பட்டது.

அத்துடன் ஐ. தே. கவின் 17 வருட கால ஆட்சி அஸ்தமித்தது.

இனி 1994ஆம் ஆண்டின் இறுதி ஆறு மாதங்களும் உள்நாட்டில் நடந்த சம்பவங்களை விவரமாகப் பார்ப்போம்–

ஜூலை

★ ஜூலை 3 — அவசரகாலச் சட்டத்தை காலாவதியாகவிட அரசு முடிவு.

கொழும்பு நகரிலும் சுற்றுப்புறங்களிலும் 700 தமிழ் இளைஞர் கைது.

★ ஜூலை 4 — 24 தமிழ் இளைஞர்கள் இரத்தினபுரியில் கைது.

★ ஜூலை 5 — கரும்புலிகள் நாள் தமிழீழம் எங்கும் அனுஷ்டிப்பு.

தேர்தல்கள் முடியும்வரை பேச்சுக்கு இடமில்லை என விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தது.

★ ஜூலை8—யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்குத் தாக்கல் செய்தது.

★ ஜூலை 9 — அனுராதபுரம் ரயில் நிலையத்தில் யாழ்தேவி ரயிலில் குண்டு வெடித்ததில் பயணிகள் இருவர் பலி, 10 பேர் காயம்.

★ ஜூலை 11 — பொதுத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த இறுதிநாள். கலவரங்கள் இடம்பெற்றன, 200 பேர் காயம்.

★ ஜூலை 14 — அவசரகாலச் சட்டம் நீ[illegible]டன் காலாவதியா[illegible] ராக[illegible]து நடவடிக்கை[illegible]டும் என தமிழீழ [illegible]றை அறிவித்தது.

★ ஜூலை 18 — யாழ். மாவட்ட தேர்தலை நிறுத்தக் கோரும் மனுவை உயர் நீதிமன்றமும் நிராகரித்தது.

★ ஜூலை 19 — தமிழீழ நிர்வாக சேவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்.

★ ஜூலை 20— இரத்தினபுரியில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக்கூட்ட மேடை இடிந்து விழுந்தது. 6 பேர் காயம்.

வல்வையில் பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் ஒருவர் தலை பிளந்து பலி.

★ ஜூலை 21 — வல்வையில் பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் ஒருவர் பலி.

பண்டத்தரிப்பு பகுதியில் இருந்து முன்னேறப் படையினர் மேற்கொண்ட முயற்சியை விடுதலைப்புலிகள் முறியடித்தனர். ஷெல் வீச்சில் ஒருவர் பலி, 11 பேர் காயம்.

★ ஜூலை 25 — மண்டைதீவுப் படையினர் ஏவிய ஷெல் ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்குள் விழுந்தது.

ஆடிவேல் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

★ ஜூலை 26 — தமிழர்களுக்கு கூடுதல் தன்னாட்சி அதிகாரம் வழங்க முடியாது என ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவிப்பு.

★ ஜூலை 28 — தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர் விவகாரம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

ஓகஸ்ட்

★ ஓகஸ்ட் 2 — பலாலி விமான தளத்துக்குள் ஊடுருவி கரும்புலிகள் துணிகரத் தாக்குதல் ஹெலி ஒன்றும், பவள் கவசவாகனமும் அழிப்பு.

★ ஓகஸ்ட் 3 — குடாநாடெங்கும் கடல், தரை, ஆகாய தாக்குதல்களில் பொதுமக்கள் ஐவர் பலி.

★ ஓகஸ்ட் 4 — பலாலிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தி காவியம் படைத்த கரும்புலிகளுக்கு மூன்று நாள் வீரவணக்க விழா ஆரம்பம்.

★ ஓகஸ்ட் 5—வடமராட்சி வலி-கிழக்குப் பகுதிகளில் இரவு நேர ஷெல் வீச்சு.

★ ஓகஸ்ட் 6 — பருத்தித்துறைக் கடலில் மீனவர் மீது கடற்படை நடத்திய தாக்குதலில் தந்தையும் மகனும் பலி.

★ ஓகஸ்ட் 8 — புத்தளத்தில் 20 மீனவர்கள் இனந் தெரியாதோரால் கடத்தப்பட்டனர்.

★ ஓகஸ்ட் 10 — அராலித் துறையில் புலிகள் நடத்திய அதிரடியில் படையினர் மூவர் பலி. இருவரின் சடலம் மீட்பு.

கேணல் கிட்டு நினைவு சிறுவர் பூங்கா நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் நகரில் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 10 பொலீஸார் மரணம். போராளிகள் ஐவர் பலி.

★ ஓகஸ்ட் 11 — பூநகரி பகுதியில் நடந்த மோதலில் எட்டுப் போராளிகள் வீரச்சாவு.

★ ஓகஸ்ட் 12 — மட்டக்களப்பு கட்டுமுறிவுக்குளம் படை முகாம் மீது புலிகள் தாக்குதல் 25 படையினர் பலி. 17 வேங்கைகள் வீரச்சாவு.

★ ஓகஸ்ட் 13 — வலி-வடக்கு, வலி-கிழக்கு, வடமராட்சி பகுதிகள் மீது பலாலி முகாமில் இருந்து படையினர் ஷெல் வீச்சு. ஏழு பொதுமக்கள் பலி. 25 பேர் காயம்.

அராலிக் கடலில் புலிகள் அதிரடி. 3 படையினர் பலி. படகு மூழ்கடிப்பு.

பொதுத்தேர்தல் பிரசாரம் நள்ளிரவுடன் முடிவடைந்தது.

★ ஓகஸ்ட் 15 — நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமடைந்தன. தேர்தல் வன்செயல்களில் ஐவர் பலி.

★ ஓகஸ்ட் 16 — பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றது. அவசரகாலச் சட்டமும், ஊரடங்கும் அமுலுக்கு வந்தன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற கடற்படையின் தலைமை தாங்கும் கட்டளைக் கப்பல் கடற்கரும்புலிகளால் நிர்மூலம். கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணி வீரச்சாவு.

★ ஓகஸ்ட் 17 — பொதுத் தேர்தலில் 105 இடங்களைப் பெற்று பொ. ஐ. முன்னணி வெற்றியீட்டியது.

★ ஓகஸ்ட் 19 — திருமதி சந்திரிகா குமாரதுங்கா புதிய பிரதமராகப் பதவியேற்றார். 22 அமைச்சர்களும் சத்தியப் பிரமாணம்.

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக பிரதமர் பதவியேற்ற பின் சந்திரிகா காவிப் பிரதி அமைச்சர் குமாரதுங்கா தெரிவித்தார்.

★ ஓகஸ்ட் 20 — தேர்தலுக்கு பிந்திய வன்செயல்களில் தெற்கில் 6 பேர் பலி.

★ ஓகஸ்ட் 24 — எதிர்க்கட்சித் தலைவராக திரு. சுமாமினி திஸாநாயக்கா தெரிவானார்.

பொருளாதாரத் தடையை நீக்கி போர் நிறுத்தம் கொண்டுவர புதிய அரசு விரும்புவதாக பாதுகாப்பு பிரதி அமைச்சராகப் பொறுப்பேற்ற கேணல் அனுருத்தரத்வத்த தெரிவித்தார்.

★ ஓகஸ்ட் 25 — புதிய சபாநாயகராக கே. பி. ரத்னாயக்கா தெரிவு.

★ ஓகஸ்ட் 26 — கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணிக்கு அஞ்சலி நிகழ்வுகள்.

★ ஓகஸ்ட் 26—நிபந்தனையில்லாத பேச்சுகளுக்குத் தயார் என்றும்— அதற்கான சூழ்நிலையை புதிய அரசு தான் உருவாக்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஓகஸ்ட் 31 — 28 வகைப் பொருள்கள் மீதான கட்டுப்பாடுகளை அரசு நீக்கியது.

செப்ரெம்பர்

★ செப்ரெம்பர் 1 — சர்வதேச செய்தி நிறுவனங்களின் செய்தியாளர்கள் பலர் யாழ். வந்தனர்.

★ செப்ரெம்பர் 2 — சமாதானமும் இயல்பு நிலையும் தோன்ற புதிய அரசு எடுக்கும் உருப்படியான முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம் என தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிவித்தார்.

போர் கைதிகள் 10 பேரை விடுதலைப் புலிகள் விடுவித்தனர்.

★ செப்ரெம்பர் 6 — கன்னாகம் மின்சக்தி நிலையத்தை புலிகள் தாக்கி அழித்ததில் வந்தாறுமூலையைச் சேர்ந்த மின்சார சபை ஊழியர் காயம்.

★ செப்ரெம்பர் 7 — பொ. ஐ. முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரதுங்கா நியமிக்கப்பட்டார்.

★ செப்ரெம்பர் 9 —ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து டி. பி. விஜேதுங்கா ராஜினாமா.

ஜனாதிபதி வேட்பாளராக காமினி திஸநாயக்கா தெரிவு.

★ செப்ரெம்பர் 10 — யாழ்பல்கலைக்கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழா.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தலைவர் பிரபாகரனுக்கு கடிதம்.

★ செப்ரெம்பர் 12 — அரசாங்கத்துடன் பூர்வாங்கப் பேச்சு நடத்த நான்கு பிரதிநிதிகளை தலைவர் பிரபாகரன் நியமித்தார். அது குறித்து சந்திரிகாவுக்கு கடிதம்.

★ செப்ரெம்பர்13 — சமாதான சூழ்நிலை ஏற்பட யுத்த நிறுத்தம் அவசியம் என பி. பி. ஸி. பேட்டியில் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

★ செப்ரெம்பர் 15 — தியாகி திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் ஆரம்பம்.

★ செப்ரெம்பர் 16 — பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். பொன்னம்பலம் கொழும்பில் காலமானார்.

★ செப்ரெம்பர் 19 — கற்பிட்டிக் கடலில் கடற்படையின் பாரிய கப்பல்களில் ஒன்றான "சாகரவர்த்தனா" விடுதலைப் புலிகளால் தகர்ப்பு. 35 கடற்படையினர் பலி. கப்பல் கப்டன் உட்பட மூவர் உயிருடன் பிடிபட்டனர்.

கடற் புலிகளின் மகளிர் படையணி விசேட தளபதி கேணல் நளாயினி உட்பட மூன்று போராளிகள் வீரச்சாவு.

★ செப்ரெம்பர் 21 — கேணல் அனுருத்தரத்வத்த தெரிவித்தார்.

பள்ளிக்குடாவில் நடந்த மோதலில் 6 போராளிகள் வீரச்சாவு.

★ செப்ரெம்பர் 7 — பொ. ஐ. முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரதுங்கா நியமிக்கப்பட்டார்.

★ செப்ரெம்பர் 9 —ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து டி. பி. விஜேதுங்கா ராஜினாமா.

ஜனாதிபதி வேட்பாளராக காமினி திஸநாயக்கா தெரிவு.

★ செப்ரெம்பர் 10 — யாழ்பல்கலைக்கழகத்தின் 14ஆவது பட்டமளிப்பு விழா.

அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா தலைவர் பிரபாகரனுக்கு கடிதம்.

★ செப்ரெம்பர் 12 — அரசாங்கத்துடன் பூர்வாங்கப் பேச்சு நடத்த நான்கு பிரதிநிதிகளை தலைவர் பிரபாகரன் நியமித்தார். அது குறித்து சந்திரிகாவுக்கு கடிதம்.

★ செப்ரெம்பர்13 — சமாதான சூழ்நிலை ஏற்பட யுத்த நிறுத்தம் அவசியம் என பி. பி. ஸி. பேட்டியில் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

★ செப்ரெம்பர் 15 — தியாகி திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் ஆரம்பம்.

★ செப்ரெம்பர் 16 — பிரபல சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். பொன்னம்பலம் கொழும்பில் காலமானார்.

★ செப்ரெம்பர் 19 — கற்பிட்டிக் கடலில் கடற்படையின் பாரிய கப்பல்களில் ஒன்றான "சாகரவர்த்தனா" விடுதலைப் புலிகளால் தகர்ப்பு. 35 கடற்படையினர் பலி. கப்பல் கப்டன் உட்பட மூவர் உயிருடன் பிடிபட்டனர்.

கடற் புலிகளின் மகளிர் படையணி விசேட தளபதி கேணல் நளாயினி உட்பட மூன்று போராளிகள் வீரச்சாவு.

★ செப்ரெம்பர் 21 — ஆரம்பக் கட்ட சமாதானப் பேச்சுக்கு அரச தரப்பு பிரதிநிதிகளை நியமித்து தலைவர் பிரபாகரனுக்கு பிரதமர் சந்திரிகா கடிதம்.

★ செப்ரெம்பர் 25 — வலி கிழக்கில் படையினர் முன்னேற எடுத்த முயற்சியை புலிகள் முறியடித்தனர். விமான, ஹெலி ஷெல் தாக்குதல்களில் 6 பேர் பலி. 35 பேர் படுகாயம். 30 வீடுகள் சேதம்.

★ செப்ரெம்பர் 26 — தியாகி திலீபனின் நினைவு நாள் அனுட்டிப்பு

★ செப்ரெம்பர் 28 — தொப்பிகல காட்டில் புலிகளின் அதிரடியில் 13 படையினர் பலி.

★ செப்ரெம்பர் 29 — "சாகரவர்த்தனா" கப்பல் தகர்ப்பு வெற்றி நாள்.

கொழும்புத்துறைப் பகுதியில் இடி, மின்னல் தாக்கி மூவர் பலி.

★ செப்ரெம்பர் 30 — ஊர்காவற்றுறையில் புலிகளின் அதிரடித் தாக்குதலில் ஈ. பி. டி. பியினர் நால்வர் பலி.

ஒக்ரோபர்

★ ஒக்ரோபர் 5 — குமரப்பா புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகள் நினைவு.

★ ஒக்ரோபர் 9 — வெற்றிலைக்கேணி கடலில் படையினரின் விநியோக கப்பலான "ஓஷன் டிரேடர்" விடுதலைப் புலிகளால் தாக்கி மூழ்கடிப்பு.

★ ஒக்ரோபர் 10 — முதல் களப்பலியான பெண் போராளி 2 ஆம் லெப். மாலதி நினைவு தினம் அனுஷ்டிப்பு.

வடமராட்சி கிழக்கில் ஷெல் தாக்குதலில் இருவர் பலி.

★ ஒக்ரோபர் 12 — மணலாறில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர் பலி.

★ ஒக்ரோபர் 13 — முதற்கட்ட சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்காக அரச தரப்புப் பிரதிநிதிகள் குமு யாழ். வந்தது.

பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்களும் வந்தனர்.

★ ஒக்ரோபர் 14 — அரச பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையே இரண்டாம் நாளாக யாழ்ப்பாணத்தில் பேச்சுக்கள் நடந்தன. முடிவில் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

அரச தரப்பு பிரதிநிதிகள் கொழும்பு திரும்பினர்.

★ ஒக்ரோபர் 15 — பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 18 தமிழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

★ ஒக்ரோபர் 17 — சமாதான முயற்சிகளை இராணுவம் குழப்பக் கூடும் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா பி. பி. ஸி பேட்டியில் தெரிவிப்பு.

★ ஒக்ரோபர் 18 — தமது பாதுகாப்பில் இருந்த 9 மீனவர்களை புலிகள் விடுதலை செய்தனர்.

★ ஒக்ரோபர் 19 — யாழ். பொது நூலகம் புனரமைப்புச் செய்யப்படும் என்று அரசு அறிவித்தது.

★ ஒக்ரோபர் 20 — இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பாக பிரதமர் சந்திரிகா தலைவர் பிரபாகரனுக்கு கடிதம்.

★ ஒக்ரோபர் 22 — ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலைமை வகிக்கப் போவதாக இ. தொ. கா அறிவித்தது.

★ ஒக்ரோபர் 24 — கிராண்ட்பாஸில் நடந்த ஐ.தே.க தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு.

காமினி திஸாநாயக்கா மற்றும் இரு அமைச்சர்கள் உட்பட 63 பேர் பலி. 300 பேர் படுகாயம்.

யாழ். நகரில் நடைபெற விருந்த இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சு கைவிடப்பட்டது.

★ ஒக்ரோபர் 25— ஐ.தே. கவின் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா திஸாநாயக்கா தெரிவு.

★ ஒக்ரோபர் 27 — அரசு புலிகள் சமாதானப் பேச்சு இடைநிறுத்தி வைக்கப்படுவதாக பிரதமர் சந்திரிகா அறிவிப்பு.

★ ஒக்ரோபர் 29— காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்குகள் சுதந்திரச் சதுக்கத்தில் நடந்தன.

★ ஒக்ரோபர் 31 — பொ.ஐ.மு. அரசின் சுற்றுலாத்துறை அமைச்சராக தொண்டமான் பதவியேற்பு.

நவம்பர்

★ நவம்பர் 6 — ஜனாதிபதித் தேர்தல் வன்செயல்களில் நால்வர் பலி.

★ நவம்பர் 8 — வெற்றிலைக்கேணி கடலில் துருப்புக்களைத் தரையிறக்கும் போர்க்கப்பல் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்.

★ நவம்பர் 9 — ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நடந்தது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்து மயக்க நிலையில் இருந்து வந்த ஒளி அபேகுணசேகரா காலமானார்.

வெற்றிலைக்கேணி முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் 4 படையினர் பலி.

20 லட்சம் பெரும்பான்மையாக்களால் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா வெற்றி ஈட்டினார்.

★ நவம்பர் 12 — திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்பு.

★ நவம்மர் 14 — பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், மற்றும் 22 அமைச்சர்களும் பதவியேற்பு.

இராணுவ நடவடிக்கைகள் ஒரு வார காலத்துக்கு நிறுந்திவைக்க தமிழீழ தேசியத் தலைவர் முடிவு செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டது.

★ நவம்பர் 15 — மாவீரர் எழுச்சி வாரம் ஆரம்பம்.

★ நவம்பர் 16 — சாவகச்சேரியில் பயணிகள் பஸ் மீது ஹெலி தாக்குதல்.

★ நவம்பர் 17 — விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மல்லியை மணலாறுப் பகுதியில் வைத்துப் படையினர் பதுங்கியிருந்து தாக்கிக் கொன்றனர்.

★ நவம்பர் 20 — புலிகளின் ஒரு வார கால இராணுவ நடவடிக்கை நிறுத்தம் முடிவு.

யுத்த நிறுத்தத்தை ஓரிரு வாரங்கள்நீடிக்கக்கோரி பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பியதாகவும் —

அதற்குத் தலைவர் பிரபாகரன் பதில் அனுப்பியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

மாவீரர் வாரம் ஆரம்பம்

★ நவம்பர் 25 — கிழக்கில் கடும் மழையால் பெருவெள்ளம்.

★ நவம்பர் 26 — தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த நாள்.

நவம்பர் 27 — மாவீரர் தினம் அனுஷ்டிப்பு.

மாவீரர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யும் தீர்வே நிரந்தர சமாதானத்தைத் தோற்றுவிக்கும் என மாவீரர் தினச் செய்தியில் தலைவர் பிரபாகரன் தெரிவித்தார்.

நவம்பர் 28 — மட்டக்களப்பில் கடந்த 30 ஆண்டுகளின் பின் கடும்மழை. 80 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு.

லெப். கேணல் மல்லியின் தலையை படையினர் துண்டித்த சம்பவம் பற்றி விசாரணை செய்ய அரசு இணங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

★ நவம்பர் 31 — நத்தாருக்கு முன் சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்மாகும் என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அறிவிப்பு.

டிசம்பர்

★ டிசம்பர் 3 — பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சந்திரிகா அரசு வெற்றியீட்டினால் உலக வங்கி இலங்கைக்குப் பெரும் நிதி உதவி வழங்கும் என அறிவிக்கப்பட்ட

[6ஆம் பக்கம் பார்க்க]

- பலாலிக்குள் ஊடுருவி கரும் புலிகள் அதிரடி.
- படைமுகாம்களில் இருந்து குடிமனைகள் மீது அகோர ஷெல்வீச்சு
- பொதுத் தேர்தல் - சந்திரிகா பிரதமரானார்.
- கடற்படைக்கட்டளைக் கப்பல் காங்கேசன்துறையில் தகர்ப்பு
- கற்பிட்டி கடலில் "சாகர வர்த்தனா"நிர்மூலம்
- வெற்றிலைக்கேணி கடலில் "ஓஷன் டிரேடர்" மூழ்கடிப்பு
- யாழ்ப்பாணத்தில் புலிகள்-அரசு சமாதானப் பேச்சு
- கைதிகள் விடுதலை
- கொழும்பை அதிரவைத்த கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு
- கடற்படையின் தரையிறக்கும் கப்பல் மீது தாக்குதல்.
- ஜனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி பெற்று சந்திரிகா ஜனாதிபதியானார்.
- மூத்த தளபதி லெப். கேணல் மல்லியின் தலை கோரத் துண்டிப்பு
- தெற்கில் வேலை நிறுத்தங்கள்.
- சமாதானப் பேச்சுகளில் பின்னடைவு.

நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி கமலம் சோமசுந்தரம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கேணியடி லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் ஆகிய கமலம் நேற்றுக் காலமாகி விட்டார்.

இவர் புளியங்கூடலைச் சேர்ந்த சின்னப்பு விசுவலிங்கத்தின் மூத்த மகளும், சிவநேசச்செல்வராசா [கொழும்பு], வரதேஸ்வரி [கொக்குஸில்], காசிலிங்கம் [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா [நடேசு], ரதி, மலைமணி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாரும், கந்தசாமி [கனடா], விசாலாட்சி [சின்னம்மா] ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31-12-94 இன்று பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நடராசா
[மருமகன்]

கேணியடி லேன், [பள்ளத்தடி]
கொக்குவில் மேற்கு. [34455]

ஆறுமுகம் மார்க்கண்டு

சங்கானையைச் சேர்ந்த ஆறுமுகம் மார்க்கண்டு ஐயனார் கோயிலடி மல்லாகத்தில் இருக்கும் அன்னாரது இல்லத்தில் 30 – 12 – 94 இல் காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி, லோகராணி, லோகசவுந்தரி ஆகியோரின் தந்தையும், செல்வராசா, இந்திரராசா (மின்சார சபை, சுன்னாகம்), ஈஸ்வரமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (31 – 12 – 94) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. செல்வராசா

ஐயனார் கோயிலடி,
மல்லாகம். (7848)

கதிரவேலு சிவபாலன்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலன் (கூட்டிடக் கலைஞர்) சிங்கப்பூரில் 25 – 12 – 94 இல் காலமானார்.

அன்னார்கதிரவேலு சிவசிரோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், சுண்டிக்குளியைச் சேர்ந்த வாசுகியின் அன்புக் கணவரும், சுண்டிக்குளி பாலசுப்பிரமணியம் வாலாம்பிகை தம்பதிகளின் மருமகனும், நர்த்தனாவின் அன்புத் தந்தையும், விமலாதேவி, ஈஸ்வரிதேவி, சக்திதேவி, குணதேவி, ஜெயபாலன் ஆகியோரின் சகோதரரும், ராம் (கனடா), தியாகராசா (கொக்குவில்), சிறிலிங்கர் (ஜேர்மனி), சிற்சபேசன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் அகவிந்தையின் (நளினி) மாமாவும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் சிங்கப்பூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி கதிரவேலு
(தந்தை)

இல 3A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி. (சி/10127)

பிலிப்பையா மனுவேற்பிள்ளை

[நடராசா]

பிலிப்பையா மனுவேற்பிள்ளை [நடராசா] அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஊசியம்மா [பொன்னம்மா], அவர்களின் அன்புக் கணவரும், ஜேக்கப், மெந்தலிசன். கிப்பொலிற்றா [சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம், கோமேந்திரன், தஸ் நேவிஸ் [புனித அன்னாள் மகா வித்தியாலயம் கொழும்பு], அன்ட்றூ [குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், அருளானந்தம், பீற்றர் [விவேகானந்தா மகா வித்தியாலயம்], கொழும்பு], பப்ரிஸ்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று [31-12-94] சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
செல்வி. இ. மனுவேற்பிள்ளை
[மகள்]

17/1 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். [34454]

திருமதி சிசிலியா அருளானந்தம்

அச்சுவேலி தென்மூலையைச் சேர்ந்த சிசிலியா அருளானந்தம் அவர்கள் நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற நிக்கொலஸ்பிள்ளை அருளானந்தத்தின் அன்பு மனைவியும், ராஜகுலேந்திரன், குபேரகுலேந்திரன் (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), போஜகுலேந்திரன், மாசில்லா அற்புதக்குமாரி (ஜேர்மனி), யாழரசி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இமெல்டா ரஞ்சினி, நிர்மலாதேவி, அன்ரன் அலெக்ஸ் (ஜேர்மனி), ஹெறன்ஸ்மன் ரவீந்திரநாத் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரவீன், பிறிந்தினி, வினோதினி, அசோக், அகிலன், நிலானி, ஜெனி அஸ்மிரா, நீல்ஸ், ஜென்சி நிசாந்துஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (31-12-94) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. குபேரகுலேந்திரன்
[மகன்]

மாசில்லா மாளிகை,
சங்கானை வீதி,
அச்சுவேலி. (34453)

20 நிமிடங்களில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் தாக்குதலின் போது முகாமில் இருந்து தப்பி ஓடி விட்டனர்.

இதேவேளை —

தாம்பரவெளியில் உள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் புதனன்று நடத்திய பாரிய தாக்குதலை அடுத்து படையினர் பரந்த அளவில் தேடுதல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர் என்றும் —

ஹெலிக்கொப்டர்கள் மூலம் காட்டுப் பகுதிகளில் தேடுதல் நடத்தப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ஐ)

சி. டபிள்யூ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

சி. டபிள்யூ நிறுவனத்தின் சேவை சகல மக்களுக்கும் கிடைக்கக் செய்வதற்காகவே இந்த முகவர்கள் நியமனம் செய்யப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

ஐ.தே.கவின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டது.

தென்பகுதியில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடும், விலை அதிகரிப்பும் ஏற்பட்டது.

★ டிசம்பர் 5 — வாழைச்சேனைப் பகுதியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் 11பேர் மரணம்.

★ டிசம்பர் 7 — ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் செய்தியுடன் வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியா விஜயம்.

விடுதலைப்புலிகள் — அரசு பேச்சை இந்தியா ஆதரிக்கிறது என பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

★ டிசம்பர் 8 — அம்பாறையில் விடுதலைப் புலிகளின் அதிரடியில் பொலீஸ் அதிரடிப் படையினர் ஏழுபேர் பலி.

★ டிசம்பர் 9 — போரை நிறுத்துமாறும், சமாதானத்தை உருவாக்குமாறும் கோரி கொழும்பில் சமாதானப் பேரணியும், சமாதான விழாவும் நடைபெற்றன.

★ டிசம்பர் 10 — வங்காலையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 4 படையினர் பலி.

★ டிசம்பர் 12 — அரசின் யுத்த நிறுத்த யோசனைக்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

★ டிசம்பர் 14 — அரசாங்க டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு.

★ டிசம்பர் 17 — பௌத்த மதம் குறித்து வெளியிட்ட கருத்துகளுக்காக பாப்பரசர் பௌத்த மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என பௌத்த பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்கலாநிதி அலோய் பீரிஸ் கேட்டுக் கொண்டார்.

★ டிசம்பர் 20 — வதிவிட வசதிகோரி கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.

★ டிசம்பர் 21 — அரசு—புலிகள் சமாதானப் பேச்சு நத்தாருக்குப் பின்னரே நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

கி. ஆ. பெ. விசுவநாதம் மறைவுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை இரங்கல்.

★ டிசம்பர் 22 — தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்தே முதலில் பேச்சு நடத்தப்படவேண்டும் எனத் தெரிவித்து உமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அரசுக்கு கடிதம்.

அன்றாடப் பிரச்சினைகள் குறித்து முதலில் பேசும் விடயத்தில் அரசு பின் வாங்கி விட்டது என அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

★ டிசம்பர் 23 — ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

★ டிசம்பர் 24 — மட்டக்களப்பில் கண்ணிவெடியில் சிக்கி 5 படையினர் உயிரிழப்பு

★ டிசம்பர் 26 — வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக முன்னாள் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா நியமிக்கப்பட்டார்.

★ டிசம்பர் 28 — மட்டக்களப்பு மாவட்டத்தில்பூமாஞ்சோலை என்னுமிடத்தில் உள்ள இராணுவ முகாமை புலிகள் கைப்பற்றினர். மோதலில் 18 வேங்கைகள் வீரச்சாவு.

★

கண்டெடுத்த நகை

யாழ். நகரில் உள்ள கடையொன்றில் தவற விடப்பட்ட நகை கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வருவாய்ப் பகுதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த நகைக்கு உரியவர் அடையாள ஆவணங்களுடன் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 11 மணிக்கு வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேக்கப்பட்டுள்ளது. (இ-3)

பாப்பரசரை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தன.

பாப்பரசரைத் தரிசிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து 7 ஆயிரம் கத்தோலிக்க மக்கள் வரவிருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்ல இதுவரை ஆயிரத்து 500 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளதால் மேலும் செல்ல விரும்புவோர் உடனடியாக பங்குதந்தைகளிடம் பதிவு செய்யுமாறு யாழ். ஆயர் கேட்டுள்ளார்.

கொழும்பு செல்வோர் கத்தோலிக்க குருமார்களினால் அடுத்த மாதம் 17 ஆம் அல்லது 18 ஆம் திகதி யாழ் பேராலயத்தில் இருந்து அழைத்துச் செல்லப்படுவர்.

கிளாலி ஊடாக செல்லும் இவர்கள் வவுனியாவில் தாண்டிக்குளம் வரை வாகனத்தில் அழைத்துச் செல்லப்படுவர் என்றும்— அங்கிருந்து ரயில் மூலம் கொழும்புக்கு கூட்டிச் செல்லப்படுவர் என்றும்—

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள 10 பாடசாலைகளில் அவர்கள் தங்கவைக்கப்படுவர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆயரால் வழங்கப்படும் அடையாள அட்டையை அவர்கள் தமது சட்டையில் தொங்கவிடவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

18 போராளிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

— மட்டக்களப்பு).

★ கப்டன் இதயராஜன் (இராமக்குட்டி பேரின்பராஜா — மட்டக்களப்பு).

★ கப்டன் வித்துவான் (இரத்தினசிங்கம் மோகனஇரத்தினம் — மட்டக்களப்பு).

★ லெப். ஆழிக்குமரன் (முருகன் மோகனதாஸன் — மட்டக்களப்பு).

★ லெப். அருணகிரிநாதன் (வில்லியம் பங்குநேசன் — அம்பாறை).

★ லெப். காண்டீபன் (நடராஜா லோகராஜா — மட்டக்களப்பு).

★ இரண்டாம் லெப். ரமேஸ் (கந்தையா ஜெயந்திரன் — மட்டக்களப்பு).

★ இரண்டாம் லெப். தவராஜ் (பாக்கியராஜா ஜெகநாதன் — மட்டக்களப்பு).

★ இரண்டாம் லெப். சேகரன் (செல்லையா விஜயராஜா — அம்பாறை).

★ இரண்டாம் லெப். தயாளன் (கோபாலபிள்ளை ஜெகநாதன்).

★ தமிழரன் (இளையதம்பி கமலபரன் — மட்டக்களப்பு),

★ சாஸ்திரி (சித்திரவேல் சுதாகரன் — மட்டக்களப்பு).

★ ஸ்ரீரூபன் (வைரமுத்து விஜயரட்ணம் — மட்டக்களப்பு).

★ புரட்சிமாறன் (அரசமணி சிவகுமார் — மட்டக்களப்பு).

★ கலாதீபன் (காசித்தம்பி தியாகராஜா — மட்டக்களப்பு). (ஐ)

BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

(94A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு)

A/L 95 மீட்டல் வகுப்புகள்

பௌதிகம் ஜெயசீலன்
இரசாயனம் பாபு
தூய, பிரயோக கணிதம் பிரபல ஆசிரியர்

பொருளியல் உதயன்
வர்த்தகம் பிரபல ஆசிரியர்
கணக்கியல் ராஜன்
அளவையியல் S.S. மனோகரன்
தமிழ் இந்.நாகரிகம் இந்.சமயம் பாலா

ஆரம்பம்: 2-1-95 திங்கள் 4P.m.

SPOKEN ENGLISH
By M.A. ஹரி B.A. Dip. Eng.

ஆரம்பமாகிவிட்டன. திங்/வெள்ளி 9 A.m.

(8173)

ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்கள் மறுப்பு அறிக்கை

கடந்த 24-12-94 உதயனில் வெளிவந்த "ஆசிரிய கலாசாலைகள் விரைவில் மூடப்படும்?" என்ற செய்தியை மறுத்து பலாலி – கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்கள் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இரு கலாசாலைகளும் மூடப்படும் என்ற தகவலில் உண்மை இல்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் கல்வித் திட்டங்கள் பற்றி நாம் கல்வி/உயர்கல்வி அமைச்சோடு தொடர்பு கொண்டுள்ளோம் —

அனுமதி பெறும் மாணவர் எணணிக்கை வீழ்ச்சி எம்மை மட்டும் பாதிக்கவில்லை. கிழக்கிலும், மலையகத்திலும் தெற்கிலும் இயங்கும் ஆசிரிய கலாசாலைகளும் இதே பிரச்சினை யை எதிர்நோக்குகின்றன. மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி அடைவது இது முதல் முறையல்ல என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். —

எனவே ஆசிரிய கலாசாலைகளின் எதிர்காலம் குறித்து கல்வியுலகம் பீதியடையத் தேவையில்லை —

என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி நோயாளி மரணத்தில் மர்மம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவரின் மரணத்தில் பெரும் மர்மம் நிலவுகிறது.

நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த அந்த நோயாளி கடந்த 23ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் ஆஸ்பத்திரி வளாகத்துக்குள்ளேயே மயக்கமுற்ற நிலையில் காயங்களுடன் விழுந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு ஒரு வார காலமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. நினைவு திரும்பாத நிலையிலேயே நேற்று அதிகாலை காலமானார்.

முதலில் எட்டாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த சுதுமலையைச் சேர்ந்த செல்லர் கிருஷ்ணபிள்ளை (34 வயது) என்ற இந்த நோயாளியின், குழந்தை ஒன்றும் சிறுவர் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்ததாக அறியவந்தது.

இவர் தனது குழந்தையைப் பார்ப்பதற்கு வந்த வேளை ஏதாவது அசம்பாவிதம் நடந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

எனினும் சரியான தகவல் கிடைக்காமல் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளன. (அ-15-13)

ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், டிச. 31

உள்ளூராட்சித் திணைக்கள ஓய்வூதியர்களுக்கான டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் 'மாஹோ' கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஒ-17)

அத்தியாவசிய சேவைகள் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 31

அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டம் முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8,30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

புத்தாண்டு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லித்துள்ளதாகவும் —

அதற்கான பதில் எந்த வேளையிலும் அனுப்பி வைக்கப்படலாம் என்றும் — நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ-3)

சங்கானை — வெல்வில்

அருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானம்

திருவாசகப் பெருவிழா

நாளை ஞாயிற்றுக்கிழமை (01-01-1995) வெகு சிறப்பாக நடைபெறுகிறது

காலை 6 மணி — விசேட பூசை

காலை 7 மணி — கூடத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இருந்து மணிவாசகப் பெருமானின் திருவுருவப்படம் சிவநாம பஜனையுடன் ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி கோயிலுக்கு எடுத்து வரப்படும்.

காலை 8 மணி — திருவாசக விழா
தலைவர்: திரு. மு. சிவானந்தம் (எம்.ஏ.)

அருளாசியுரை:
சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவ சிவாச்சாரியார்
(இந்து மத குரு பீடாதிபதி)

சிறப்புரைகள்:
சிவஸ்ரீ சாம் சோமாஸ்கந்த சர்மா, ம. ஜெயராம சர்மா, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், தமிழருவி த. சிவகுமாரன், சைவப் புலவர் அ. கமலானந்தன், தமிழ்மணி எஸ். ஏணேசசுந்தரம்.

காலை 10 மணி:
சங்கீத பூஷணம்
எஸ். கணபதிப்பிள்ளை
தலைமையில்
திருவாசகம் முற்றுமோதல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தர்மகர்த்தாக்கள்,
ஸ்ரீ சிவசுப்பிரமண்ய சுவாமி
தேவஸ்தானம்.

வெல்வில்,
சங்கானை. (சி-10129)

மரண அறிவித்தல்கள்

திருமதி சிவகுரு இராசம்மா

ஆத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சிவகுரு இராசம்மா 30-12-94 ல் காலமாகிவிட்டார்.

அன்னார் கு. சிவகுருவின் அன்பு மனைவியும், திருமதி ஜெ. சிவகுமாரியின் அன்புத் தாயாரும், ம. ஜெயரஞ்சனின் அன்பு மாமியாரும், செல்வன் ஜிற்றேந்திரா (மாணவன், இந்துக்கல்லூரி, கொழும்பு), நிலானி, நிமலன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்ற சிவசுந்தரம் வள்ளிப்பிள்ளை, சண்முகம் சரஸ்வதி, காலஞ்சென்ற கனகசபை, தும்பளை திருமதி சபாநாயகம் சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் நாளை (1-1-95) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. அழகரத்தினம்

ஆத்தியடி, புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (8172)

செ[illegible]கல்பனா தெட்சணாமூர்த்தி

[illegible]நெற்பிடமாகவும், கொக்குவில் மே[illegible]டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்[illegible]தெட்சணாமூர்த்தியின் மகள் கல்பனா நேற்று மாலை அகால மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் கொக்குவில் மேற்கு கேணியடி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக இன்று (31-12-94) பிற்பகல் 2 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
செ.தெட்சணாமூர்த்தி
[தகப்பன்]

[34456]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31—12—1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org